# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 416/2016 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW1 | Caste | : |
| Name | : ஆனந்தவள்ளி | Calling | : |
| Father / Husband Name | : கஜேந்திரன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 17th September 2025.

-----------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

நான் மேட்டாலங்குடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கஜேந்திரன் எனது கணவர். ஆஜர் எதிரியைத் தெரியுமா என்றால் தெரியும். தேதி, மாதம் ஞாபகமில்லை. சுமார் 9 வருடங்களுக்கு முன்பு எனக்கு எனது கணவர் விபத்தில் சிக்கிவிட்டதாக தகவல் சொன்னார்கள். அதன் பிறகு நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று எனது கணவரை சென்றுப் பார்த்தேன். எனது கணவருக்கு தலையில் காயம்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்தது. எனது கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். எனது கணவரைப் பார்த்தவுடன் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. அங்கிருந்து உடனே சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்தார்கள். அதன் பிறகு எனது கணவரின் உடலை நல்லடக்கம் செய்தவர்காக எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். சம்பவம் சம்பந்தமாக காளையார்கோவில் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

SELVAM P Digitally signed by SELVAM P Date: 2025.09.17 16:55:33 +0530

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எனக்கு சம்பவம் நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் எப்படி இறந்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் என்ன எழுதியுள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான் எனக்கு எழுத படிக்கத் தெரியாது.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.09.17 16:55:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

சிவகங்கை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 416/2016 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 2 | Caste | : |
| Name | : காளிமுத்து | Calling | : |
| Father / Husband Name | : முத்துகருப்பன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 17th September 2025.

----------------------------------------------------------------------------------------------------

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை:-

நான் முடிக்கரையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது போலீசார் என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த பார்வை மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிற**து. மேற்படி ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Hostile (அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

SELVAM P
Digitally signed by SELVAM P
Date: 2025.09.17 16:55:51 +0530

கடந்த 31.01.2016 ம் தேதி மாலை 05.00 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து போலீசார் என் முன்பாகவும் பெரியசாமி என்பவர் முன்பாகவும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** இல்லை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.09.17 16:55:58 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,

சிவகங்கை.